

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மேற்கு மாவட்டத்தில் உள்ள தருமபுரி கிழக்கு, பாப்பிரெட்டிப்பட்டி மத்திய, அரூர் மேற்கு, அரூர் தெற்கு, காரிமங்கலம் மத்திய, பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு, கடத்தூர் மேற்கு, அரூர் கிழக்கு, அரூர் வடக்கு, பாலக்கோடு மேற்கு, மொரப்பூர் கிழக்கு, மொரப்பூர் மேற்கு, காரிமங்கலம் கிழக்கு, காரிமங்கலம் மேற்கு, தருமபுரி தெற்கு ஆகிய ஒன்றியங்களிலும், அரூர், காரிமங்கலம், பாப்பிரெட்டிப்பட்டி, கம்பைநல்லூர் ஆகிய பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 19.06.2025 | பொ.மல்லாபுரம் பேரூர் | அண்ணா சிலை அருகில், பொம்மிடி. | ஜெ.எல்.அதியமான் த.தங்கமுத்து |



தருமபுரி

நாள் : 17-06-2025

# நெல்லை கிழக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை.ஜுன்.19.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின், வழிகாட்டுதலின்படி “ஓரணியில் தமிழ்நாடு” கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (19.06.2025 - வியாழக்கிழமை) காலை 9.30 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெறுகிறது.என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.



முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (19 ம் தேதி) காலை 9:30 மணிக்கு மாவட்ட அவை தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் என்.சுரேஷ்ராஜன், எம்.ஜோசப்ராஜ், எம்.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தவறாது கலந்து கொண்டு தங்களின் கருத்துகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1.கழக புதிய உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து.

2. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஏழாஞ்சேரி கெ. வரதன்

### ஜுன் 19 (2003)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் “நீதிதேவன் மயக்கம்” நாடகத்தில் நடித்தவர்.

ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற ‘இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்’ காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யயப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# பள்ளிப்பட்டு பத்மாவதி மறைவு!

திருவள்ளூர், ஜுன். 19–

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.ரவீந்திரா அவர்களின் தாயார் ஜி.பத்மாவதி வயது 93, நேற்று முன்தினம் (17–06–2025) மாலை 4:30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்து அன்னாரின் உடலுக்கு கழத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (18–6–2025 – புதன் கிழமை) பகல் 1.30 மணி அளவில் கீச்சலம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இடுகாட்டுக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் திருவள் ளூர்மேற்குமாவட்டம் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள திமிரி மத்திய, திமிரி கிழக்கு, வாலாஜா தெற்கு, காவேரிப்பாக்கம் தெற்கு ஆகிய ஒன்றியங்களிலும், ஆற்காடு நகரத்திலும், கலவை, விளாப்பாக்கம், திமிரி, காவேரிப்பாக்கம் ஆகிய பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 20.06.2025 | நெமிலி மேற்கு ஒன்றியம் | மேலபுலம் புதூர், காட்டுப்பாக்கம். | வெ.ஆர்த்தி |
| 2, 3 | | பனப்பாக்கம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | வெ.ஆர்த்தி |
| 4 | | நெமிலி மேற்கு ஒன்றியம் | காட்டுப்பாக்கம் | வெ.ஆர்த்தி |
| 5 | | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | இச்சிப்புத்தூர் | சேர்க்காடு கென்னடி |
| 6 | | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | பெருங்களத்தூர், இந்திரா நகர். | சேர்க்காடு கென்னடி |
| 7, 8 | | இராணிப்பேட்டை நகரம் | எம்.எல்.ஏ. அலுவலகம் அருகில், சந்தை மைதானம். | எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம் |
| 9 | | வாலாஜா மத்திய ஒன்றியம் | வானாப்பாடி | எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம் |
| 10 | 21.06.2025 | அரக்கோணம் நகரம் | பழனிப்பேட்டை | தூத்துக்குடி சரத்பாலா |
| 11 | | அரக்கோணம் நகரம் | இந்திரா காந்தி சிலை அருகில் | தூத்துக்குடி சரத்பாலா |
| 12 | | நெமிலி மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், சித்தூர். | சேர்க்காடு கென்னடி |
| | | நெமிலி பேரூர் | பேருந்து நிலையம் | சேர்க்காடு கென்னடி |
| 13 | | நெமிலி மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், நாகவேடு. | சேர்க்காடு கென்னடி |
| 14 | 22.06.2025 | நெமிலி வடக்கு ஒன்றியம் | மேலேரி ஊராட்சி | இரா.தமிழ்வாணன் |
| 15 | | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | உரியூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| 16 | | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | அனந்தாபுரம் | தூத்துக்குடி சரத்பாலா |
| 17 | | தக்கோலம் பேரூர் | தேரடி | தூத்துக்குடி சரத்பாலா |
| 18 | | நெமிலி வடக்கு ஒன்றியம் | திருமால்பூர் | இரா.தமிழ்வாணன் |
| 19 | 23.06.2025 | சோளிங்கர் வடக்கு ஒன்றியம் | ஆயில் ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா |
| 20 | | சோளிங்கர் வடக்கு ஒன்றியம் | சூரை ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா |
| 21 | | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | தண்டலம் | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 22 | | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | கும்மினிப்பேட்டை | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 23 | 24.06.2025 | சோளிங்கர் நகரம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 24 | | சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் | பாராஞ்சி | கந்திலி கரிகாலன் |
| 25 | | சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் | சாலை | கந்திலி கரிகாலன் |
| 26 | 25.06.2025 | வாலாஜா நகரம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 27 | | ஆற்காடு கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 28 | | அம்மூர் பேரூர் | அண்ணாசிலை அருகில் | கந்திலி கரிகாலன் |
| 29 | | வாலாஜா கிழக்கு ஒன்றியம் | சாத்தம்பாக்கம் | கந்திலி கரிகாலன் |
| 30 | | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | கரடிக்குப்பம் | முரசொலி மூர்த்தி |
| 31 | | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | கோவிந்தச்சேரி குப்பம் | முரசொலி மூர்த்தி |
| 32 | 26.06.2025 | நெமிலி கிழக்கு ஒன்றியம் | கணபதிபுரம், சேந்தமங்கலம். | எட்டயாபுரம் தமிழ்பிரியன் |
| 33 | 27.06.2025 | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | காட்ராம்பாக்கம் | முரசொலி மூர்த்தி |
| 34 | | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | வடகடபந்தாங்கல் | முரசொலி மூர்த்தி |



இராணிப்பேட்டை

நாள் : 17-06-2025